[1973 நவம்பர் 22]

விரைவுப் பேருந்துகள் நின்று செல்லுமிடங்கள்.

*326 வினு—திரு. த. சோனையா : மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினுவுக்கு விடையளிப்பாரா—

மதுரை-மண்டபம் நெடுஞ்சாலே வழியாகச் செல்லும் விரைவு வண்டிகள் 12-வது மைலில் உள்ள திருப்புவனத்தில் நிற்பதற்கு அரசு என்ன நடவடிக்கை எடுத்துள்ளது?

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் : அவ்வழியாகச் செல்லும் விரைவு வண்டிகளே திருப்புவனத்தில் நிறுத்த வேண்டிய தேவை இல்லே என்று கருதப்படுகிறது.

திரு. த. சோனையா : தலேவரவர்களே, மதுரையிலிருந்து 12 மைல் தொலேவிலுள்ள திருமங்கலம், அதைப்போல 12 மைல் தொலேவிலுள்ள சோழவந்தானிலும் விரைவு வண்டிகள் நின்று போகின்றன. அப்படி இருக்கும்போது 12 மைல் தொலேவிலுள்ள திருப்புவனத்தில் ஏன் நிற்கக்கூடாது? அதுமட்டுமல்ல. மதுரையிலிருந்து வருகிற சிட்டி பஸ் எண் 32, திருப்புவனம் பஸ் ஸ்டாண்டிலிருந்து 2 பர்லாங் தூரத்திலிருந்து திரும்பிவிடுகிறது. அது அந்த 2 பர்லாங் தூரமும் வந்து திரும்புவதற்கு நடவடிக்கை எடுக்கப்படுமா?

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் : நின்று நின்று சென்ருல் அது விரைவு வண்டி ஆகாது. அதனுல் அதிகமாக விரைவுப் பேருந்துகளே நிறுத்தும் இடங்களேக் குறைத்திருக்கிருேம். மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் வேறு இரண்டு இடங்களேப் பற்றியும் சொன்னுர்கள். அதைப்பற்றி அரசாங்கம் பரிசீலிக்கும். ஏதோ பஸ் திருப்புவனம் பஸ் ஸ்டாண்ட் வரை வரவில்லே என்று சொன்னுர்கள். அதற்குத் தக்க நடவடிக்கை எடுக்கப்படும்.

திரு. த. சோனையா : பன்னிரண்டு மைல் தொலேவிலுள்ள சோழவந்தானிலும், திருமங்கலத்திலும் நின்று செல்லக்கூடிய விரைவுப் பேருந்துகள் ஏன் 12 மைல் தொலேவிலுள்ள திருப்புவனத்தில் நின்று போகக்கூடாது? மற்றவர்களுக்குக் கொடுக்கும் உரிமை எங்களுக்கும் கொடுக்கப்பட வேண்டும்.

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் : சாதாரண பேருந்தாக இருந்தால் நிச்சயமாக அங்கேயும் நின்றுதான் போகும். விரைவுப் பேருந்தாக இருப்பதால் அங்கே நின்றுபோவது சரியல்ல என்று கருதுகிறார்கள்.

* 327 வினா—**திரு. நா. வெ. குருசாமி :** மாண்புமிகு போக்கு வரத்துத் துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

மதுரையில் இருந்து கூடலூர் செல்லும் பாண்டியன் போக்கு வரத்து துரித வண்டி ஆண்டிப்பட்டியில் நின்று செல்லச் செய்யும் செயற்குறிப்பு அரசிடம் உள்ளதா ?

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் : இல்லை.

திரு. நா. வெ. குருசாமி : தலைவரவர்களே, மதுரையிலிருந்து கூடலூர் செல்லும் விரைவுப் பேருந்து ஆண்டிப்பட்டியில் நிற்பது இல்லை. ஆகவே, எங்களைப் போன்றவர்கள் ஆண்டிப்பட்டியில் இறங்க முடியாமல் போகிறது. அங்கே டிக்கட்டுகள் போட்டுக் கொடுக்கப்படுவதில்லை என்றாலும், விரைவுப் பேருந்துகள் நின்று போவதற்காவது வசதி செய்து கொடுப்பார்களா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் : அரசு பேருந்துத் துறையின் சார்பில் மதுரையிலிருந்து கூடலூருக்கு விரைவுப் பேருந்து விடப்படவில்லை. அந்த பஸ்கள் பாண்டியன் போக்கு வரத்துக் கழகத்தைச் சேர்ந்தவை. அதனால் மாண்புமிகு உறுப்பினர் அவர்களின் யோசனை பாண்டியன் போக்குவரத்துக் கழகத்திற்கு அனுப்பி வைக்கப்படும்.

ஆரம்பாக்கத்திலுள்ள சோப்புத் தொழிற்சாலை

* 328 வினா—**திரு. கா. வேழவேந்தன் :** மாண்புமிகு அறநிலையத் துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

கும்மிடிப்பூண்டித் துணை வட்டம், ஆரம்பாக்கம் கிராமத்தில் நடைபெறும் கதர் கிராமத் தொழில் வாரிய சோப்புத் தொழிற் சாலையை மேலும் விரிவுபடுத்தி வேலைவாய்ப்பும் வருவாயும் பெருக்கும் திட்டம் உண்டா ?